# ஆண்டறிக்கை

# 2024

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமானதும், பாதுகாப்பானதுமான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

## செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின்**

**2024 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை**

| தொடர் இல. | பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலம் | தகைமை பெற்ற துறை | வேறு பதவியணி அல்லது குழுக்களின் உறுப்புரிமை | 2024 ஆண்டு பற்கேற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | நிறைவேற்று, நிறைவேற்று அல்லாத மற்றும் சுயாதீன |
|---|---|---|---|---|---|---|
| 01 | செல்வி பிரீதி இனோக ரணசிங்க | தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2024.10.08 | ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி | - | 01 | நிறைவேற்று |
| 02 | பேராசிரியர் திரு கிலிபர்ட் பெரேரா | பிரதி தவிசாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2024.11.28 | நீதிமன்ற மருத்துவவியல் பற்றிய பேராசிரியர், மருத்துவப் பீடம், ருஹுணு பல்கலைக் கழகம் MBBS, DLM , MD in Forensic Medicine, MA, LLB, DMJPath(London), MFFLM(UK), Atteorney- at-Law, FCFPSL | **Senior Student Counsellor**- University of Ruhuna, **Chairman** - Board of Study in Forensic Medicine,Post graduate Institute of Medicine, University of Colombo, **President-** Sri Lanka College of Legal Medicine, Treasurer, Indo Pacific Association for Law Medicine and Scinece, **Member-**Post Crash Response squad, Ministry of Trasport, Government of Sri Lanka. | 01 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03 | டாக்டர் திருமதி தர்ஷனீ புத்திகா ஹெட்டிஆரச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் 2024.07.29 | மருத்துவ நிபுணர் சிறுவர் மற்றும் இளம்பராய ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை<br><br>MBBS ( Colombo)2005, MD Psychiatry, Board Certified Specialist Child and Adolescent Psychiatrist | **Chairperson-** Child and Adolescent sub committee, Sri Lanka College of psychiatrists. **Committee Member-** Technical Advisory committee on young persons health, Family health bureau, Ministry of Health, **Committee Member -** National Steering committee on Child disabilities, Ministry of Health, **Committee Member-** Ethical review committee lady ridgeway Hospitals for children, **Autism streering committe,** Lady ridgeway Hospitals for children | 02 | நிறைவேற்று அல்லாத |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04 | டாக்டர் திரு சேனக குணதிலக்க | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2020.01.22<br>2022.07.08 | சிரேஷ்ட சிறுவர் நோயியல் மருத்துவ நிபுணர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் பல்கலைக் கழக வைத்தியசாலை, ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்<br>MD (Col), DCH (Col), MBBS (Col) | | 07 | |
| 05 | டாக்டர் திரு அஜித் தென்னக்கோன் | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2022.07.28 | சிரேஷ்ட விரிவுரையாளர், ஜெனரல் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகம்<br>MD ( USSR), DCM, MD for Medicine (SSL), DipFM-RCPA(AM), MFFLM-RCP (UK), FFCFM-RCPA | Board Member - National Authority on Protection of Victims of Crime and Witness, Board Member- National Anti Human Traffiking Task Force, Board Member- office on missing person. | 07 | நிறைவேற்று அல்லாத |
| 06 | கலாநிதி திருமதி பவித்ரா கொடமுன்னே | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2021.02.17<br>2022.07.28 | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>மருத்துவ பீடம், | | 07 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | களனி பல்கலைக் கழகம், களனி<br>BSc (Hons)Psychology (East London)<br>MA Psychology (Delhi)<br>PhD (Kelaniya) | | | |
| 07 | திருமதி மைத்திரீ அமரசிங்க ஜயதிலக்க | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2024.07.29 | சிரேஷ்ட அரச சட்டவாதி, சட்ட மாஅதிபர் திணைக்களம்,<br>LLM( university of Warwick U.K), H.R and Int. Development Law | | 03 | |
| 08 | திருமதி ரேணுகா ஜயசுந்தர | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2024.07.29 | பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள்) பொலிஸ் திணைக்களம்<br>Master of Public Management. (SLIDA) | Joint Secretary at Medico Legal Society , கைதிகளை லீவில் அனுப்புதல், அனுமதிப்பத்திரம் மீது விடுவிக்கும் குழு உறுப்பினர் | 03 | நிறைவேற்று அல்லா |
| 09 | ගයනි කෞශල්‍යා මහත්මිය | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2023.01.24<br>2024.02.22 | ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் | | 07 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | திணைக்களம், பத்தரமுல்லை<br><br>B.sc. (Business Administration), M.A (Sociology) | | | |
| 10 | එච්.කේ.කේ.ඒ. ජයසුන්දර මහතා | අධ්‍යක්ෂ මණ්ඩල සාමාජික 2024.04.04 | தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம், கொழும்பு 06<br><br>Bachelor of Arts ( Political Science-Special), University of Colombo -1996, Master of Development Policy, KDI school of Public Policy and Management Korea-2016, Attorney At Law -Supreme Court of Sri Lanka- 2009 | **Board Member:** Sri Lanka Vocational Training Authority, HDFC Bank and Sirama Vasana Fund, **Vice Chairman in Governing Council:** National Institute of Labour Studies & National Institute of Occupational Safety and health | 04 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 | திரு எம்.எச்.ஜி. பண்டார | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>பிரதிநிதி (சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 40 ஆம் பிரிவின் மூலம் மேற்படி சமவாயத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் பணிக்காக தாபிக்கப்பட்டுள்ள குழுவின் தவிசாளரின் பிரதிநிதி)<br><br>(2020.01.22) | மேலதிக செயலாளர் (நிருவாகம்) சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சு, பத்தரமுல்ல<br><br>பொருளியல் விசேட பட்டம் (கொழும்பு பல்கலைக் கழகம்), பொருளியல் பற்றிய முதுமானிப் பட்டம் (மலய பல்கலைக் கழகம், மலேசியா) | | 06 | நிறைவேற்று அல்லாத |
| 12 | වෛද්‍ය එම්.යූ. කුමාරි ගල්හේන මහත්මිය | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>2024.07.29 | மருத்துவ நிபுணர், குடும்ப மருத்துவவியல்<br><br>ஆதார வைத்தியசாலை பாணந்துறை<br><br>MBBS(Peradeniya), MD ( Family Medicine), DFM, MRCGP ( Int) | **Board Member-** Post gradute Institute of Medicine- University Colombo | 02 | |
| 13 | திரு எச்.எம். திலகரத்ன | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br><br>2024.07.29 | ஒருங்கிணைப்பு செயலாளர், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு | | 02 | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | BSc University of Ruhuna, MSSC University of Kelaniya | | | |
| 14 | நிறைவேற்று அல்லாத திருமதி மிலானி சல்பிட்டிகோரல | பணிப்பாளர் சபை உறுப்பினர்<br>2024.07.29 | சிரேஷ்ட சட்டத்தரணி | | 01 | |

# 2024 ஆம் ஆண்டுக்கான சபை உறுப்பினர்கள்

| தொடர் இல | சபை உறுப்பினர்களின் பெயர்கள் | பதவிப் பெயரும், நியமனம் பெற்ற காலஎல்லையும் | கடமையாற்றும் இடத்தின் முகவரி |
|---|---|---|---|
| 01 | திருமதி ஏ.எம்.டி. சுமணசேன | சபை உறுப்பினர் (2020.05.26) | ஆணையாளர், சிறுவர் மற்றும் மகளிர் பிரிவு, தொழில் திணைக்களம், கொழும்பு 05 |
| 02 | டாக்டர் திருமதி எச்.எஸ்.ஆர். பெரேரா | சபை உறுப்பினர் (2020.06.19) | பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, கொழும்பு 10 |
| 03 | திரு கே.பி.என். தேவப்பிரிய | சபை உறுப்பினர் (2020.06.11) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல |
| 04 | திருமதி ரோஷினி ஹெட்டிகே | சபை உறுப்பினர் (2020.06.09) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்), நீதி அமைச்சு, கொழும்பு 12 |
| 05 | திருமதி எம்.சீ.எஸ். தேவசுரேந்திர | சபை உறுப்பினர் (2020.05.26) | பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்) தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, பொல்ஹேன்கொட, கொழும்பு 05 |
| 06 | திருமதி வீ.சீ.டி. சில்வா | சபை உறுப்பினர் (2021.01.22) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 |
| 07 | டாக்டர் லால் பனாபிட்டிய | சபை உறுப்பினர் (2021.03.17) | பிரதிப் பணிப்பாளர் நாயகம், சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு, கொழும்பு 10 |
| 08 | திருமதி ஹசினி பல்லேவெல | சபை உறுப்பினர் (2020.05.20) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம்), பாதுகாப்பு அமைச்சு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே |
| 09 | திரு எம்.டி.ஜே.சீ. முரகே | சபை உறுப்பினர் (2022.10.13) | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (போக்குவரத்து மற்றும் பாராளுமுன்ற அலுவல்கள்), கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல |

# உள்ளடக்கம்


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு | 1 - 1 |
| அறிமுகம் | 2 - 3 |
| பிரதான பணிகள் | 3 - 4 |
| 2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவனக் குறிப்பு | 4 - 4 |
| 2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவன ஒழுங்கமைப்பு | 5 - 5 |
| 2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி மற்றும் வெற்றிடங்கள் | 6 - 7 |
| நிதிசார் மற்றும் நடவடிக்கைசார் செயலாற்றுகை பகுப்பாய்வு | 7 - 8 |
| **அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2024** | |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 8 - 10 |
| சிறுவர் துர்நடத்தைகளைத் தடுப்பதற்கான தேசிய கொள்கையை விளைத்திறன்மிக்கவாறு அமுல்படுத்தத் தேவையான சட்டரீதியான, நிருவாக ரீதியான அல்லது வேறு திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு சட்டப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள் | 10 - 13 |
| சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல் | 13 - 13 |
| தேசிய தரவு முறைமையை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல் | 13 - 14 |
| 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை | 14 - 14 |
| சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் | 14 - 18 |
| பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை ‘‘சுரகும் பவ்வ’’ தாபித்தல் மற்றும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை செயற்படுத்தல் | 18 - 19 |
| சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய ‘‘மாணவர் தூதுவர்’’ தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 19 - 20 |
| பல்கலைக் கழக மாணவர்களுக்கான சிறுவர் பாதுகாப்பு பற்றிய ‘‘பல்கலைக் கழக மாணவர் தூதுவர்’’ தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 20 - 21 |
| அனர்த்த அல்லது அவசர நிலைமைகளின் போது சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவசர நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம் | 21 - 21 |
| பாதிக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, அச்சுறுத்தலான, அபாயத்திற்கு ஆளாகக்கூடிய கண்ணுக்குப் புலப்படாத சிறுவர்கள் மற்றும் சிறுவர் துஷபிரயோகங்களுக்கு ஆளானவர்களுக்கு கல்வி உதவி அல்லது உரிய உதவிகளை பெற்றுக் கொடுத்தல் | 22 - 22 |
| சிறுவர் அரவணைப்பு சேவைகளை வழங்கும் சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும், ஒழுங்குறுத்துவதும் | 22 - 23 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் கல்வி பயிலும் மருத்துவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 23 - 23 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி தேசிய கல்விக் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்கள் மற்றும் பதவியணியினரை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 23 - 24 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி சுகாதார அமைச்சின் கீழுள்ள தாதிப் பயிற்சிக் கல்லூரிகளின் தாதி அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் | 24 - 25 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி ஊடக நிறுவனங்கள், கல்வி மற்றும் தொடர்புசாதன, தகவல், கண்காட்சி மற்றும் நடமாடும் சேவைகள், தினங்களை கொண்டாடல் மற்றும் சம்பவங்கள், கருவிகள் அபிவருத்தி NCPA உத்தியோகபூர்வ | 25 - 26 |

| | |
|---|---|
| இணையத்தளம், பேஸ்புக், YouTube மற்றும் Twitter பேணிவருவது தொடர்பாக தொடர்புசாதன நிகழ்ச்சித்திட்டங்கள் | |
| விசேட விசாரணைகள், விசாரணைகளை ஒழுங்குறுத்தல், குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் பற்றி ஒழுங்குறுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைள் பற்றிய சைபர் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 26 - 27 |
| சிறுவர்களுக்கு சாதகமான முறையில் வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் பிரிவுகளை தாபித்தல், பேணிவருதல் மற்றும் உரிமைகள் மீறப்பட்டுள்ள சிறுவர்களுக்கு உதவுதல் | 27 - 27 |
| தேசிய சிறுவர் மைய உளவியல் சமூக உதவிச் சேவை | 28 - 29 |
| சிறுவர் துஷ்பிரயோக மீள்இணக்க பாடவிதானம் | 29 - 29 |
| பெருந்தோட்டத்துறை சார்ந்த சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தப்படும் விசேட சமுதாய நிகழ்ச்சித்திட்டம் | 29 - 29 |
| கரையோர வலயத்தை மையமாகக் கொண்டுள்ள கிராமங்களில் வாழும் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தலை கட்டியெழுப்புவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற சமுதாய அடிப்படையிலான விசேட நிகழ்ச்சித்திட்டம் | 30 - 30 |
| விடுதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 31 - 31 |
| கிராமிய மட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை வளர்ப்பதற்காக சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டம் (“எமது சிறுவர்களுக்கு மென்மேலும் பாதுகாப்பான கிராமம்”) | 31 - 32 |
| பாடசாலை சிறுவர்களை கொண்டு செல்லும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | 32 - 32 |
| விசேட பொலிஸ் விசாரணைகள் | 32 - 33 |
| வருடாந்த கணக்குகள் | 34 - 51 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 52 - 64 |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தவிசாளரின் மீளாய்வு

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான தேசிய கொள்கையை தயார் செய்யும் பணிக்கு மற்றும் சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்கு 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

இந்த ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பான கொள்கையை தயார் செய்தல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்காக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதை பரந்தளவில் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய 2024 ஆண்டு சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. மேற்படி சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டன.

கல்வி அமைச்சுச் செயலாளரின் 2011/17 ஆம் இலக்க 2021 மே மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்பட்ட பாடசாலை சிறுவர் பாதுகாப்புச் சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள ''சுரெகும் பவ்வ'' தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அடுத்த கட்டப் பணியொன்றாக பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை மதிப்பீடு செய்யும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் நிறைவு செய்யப்பட்டது. சிரேஷ்ட பாடசாலை மாணவர் தலைவர்களின் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கு அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ''மாணவர் தூதுவர்'' தேசிய நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டிலும் நடாத்தப்பட்டது. பல்கலைக் கழக மாணவர்களின் சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதற்காக ''பல்லைக் கழக மாணவர் தூதுவர்'' தேசிய நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

நாடளாவிய ரீதியில் உள்ள தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவதற்காக மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள், மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களினால் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுவரின் உச்சளவான நலனை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு தத்துவமுள்ளதாக்கப்பட்டு சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தமான சகல குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு தவறாளியாகும் ஆட்கள் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதைத் தடுப்பதற்கான நடைமுறையை அறிமுகம் செய்வதும் மேற்கொள்ளப்பட்டது.

சிறுவர் துஷ்பிரயோகம் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்கள் இரு தடவை பாதிக்கப்படுவதை தடுப்பதற்காக சிறுவர்களுக்கு நட்புறவான வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் அலகுகள் மூலம் சிறுவர்களின் சாட்சியங்கள் வீடியோ ஒளிப்பதிவு செய்யப்பட்டன. பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளவியல் சமூக மீள்இணைப்பை ஏற்படுத்தி அவர்களின் திறமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அவர்கள் மீண்டும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாவதைத் தடுப்பதற்காக முறையொன்றாக, பாதிக்கப்பட்டவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான சிகிச்சைசார் மாதிரியமைப்பாக சிறுவர் துஷ்பிரயோக மீள்இணைத்தல் பாடவிதானம் (Child Abuse Recovery Curriculum) தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் 08 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பொதுவாக நோக்கும் போது 2024 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட சகல துறைகளிலும் குறிப்பிடத்தக்களவு செயலாற்றுகையை அடைந்துகொள்ள இயலுமாயிற்று என்பதைக் குறிப்பிட முடியும். இதற்கு பணிப்பாளர் சபை, நேர்வரிசை அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பதவியணியினரிடமிருந்தும் கிடைத்த ஒத்துழைப்பை மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.

பிரீதி இனோகா ரணசிங்க
தவிசாளர்
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# அறிமுகம்

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி "ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்" உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் சமவாயத்தை நிறைவேற்றிக் கொண்ட பின்னர் மேற்படி காலப் பகுதியில் காணப்பட்ட சமூக நிலைமைகளை ஆராயும் போது, சிறுவர் ஆட்கடத்தல், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர் ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் சர்வதேச ரீதியில் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் ஆட்கடத்தில் அதிகரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஆயுத மோதல்களின் போது சிறுவர்களை பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதை சர்வதேச குற்றச் செயலாக கருதுவதும் இனங்காணப்பட்டது. இவ்வனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தி 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1990 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. 1991 யூலை மாதம் 12 ஆம் திகதி இது நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன் போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பித்தது. அதற்கமைய 1998 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நீதி அமைச்சரினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 1998 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இச்சட்டம் பாராளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தாபிக்கப்பட்டது. 1990 யூன் மாதம் அதிகாரசபையின் தலைவர் மற்றும் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டதை அடுத்து அதிகாரசபை இயங்க ஆரம்பித்தது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீள்சமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டிலுள்ள சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகார சபைக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும் போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் இயங்கும் வகையில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவது படிப்படியாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதான பணியொன்றான ''சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை''க்கு 2019.10.29 ஆம் திகதிய அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தத் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான குறித்த ஐந்து வருட திட்டமும் தயார் செய்து முடிக்கப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புக்காக 2024 ஆம் ஆண்டிலும் தேசிய செயற்றிட்டங்களுக்கு அமைய தமது பணிகளை மேற்கொண்டுள்ளது.

## பிரதான செயற்பணி

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பரந்தளவிலான செயற்பணி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. குறித்த செயற்பணி பின்வருமாறாகும். (14 ஆம் பிரிவுக்கு அமைய)

(அ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.

(ஆ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(இ) அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

(ஈ) துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.

(உ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும், அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப் பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளல்.

(ஊ) சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிருவாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.

(எ) சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.

(ஏ) சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குறுத்தல்.

(ஐ) ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.

(ஒ) குற்றங்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஓ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றுக் கொள்வதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.

(ஔ) சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.

(க) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக் கட்டமைப்பை தயார் செய்வதும், அதனை பேணிவருவதும்.

(ங) சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குறுத்தல்களும்.

(ச) சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும், மேம்படுத்துவதும், ஒருங்கிணைப்புச் செய்வதும்.

(ஞ) சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.

(ட) சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.

(ண) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.

(த) சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்திக் கொள்வதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

**2024 ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் நிறுவன ஒழுங்கமைப்பு**



## 2024 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

1. தவிசாளர் மற்றும் பிரதித் தவிசாளர் அலுவலகம்
2. பணிப்பாளர் நாயகம் அலுவலகம்
3. நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
4. நிதிப் பிரிவு
5. திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - 5.1 திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலகு
    - 5.2 தகவல் மற்றும் ஊடக அலகு
    - நூலகம்
6. நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
7. உளவியல் சமூக பிரிவு
8. சட்டப் பிரிவு
9. சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 9.1 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை
    - 9.2 மத்திய ஆவணக்காப்பகம்
    - 9.3 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு
        - 9.3.1 வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் அலகு - ராகம
    - 9.4 இணையத்தளக் கண்காணிப்பு பிரிவு
    - 9.5 விசாரணை பிரிவு
10. உள்ளகக் கணக்காய்வு பிரிவு
11. விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

**2024 ஆம் ஆண்டுக்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி வெற்றிடங்கள்**

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | சேவையில் ஈடுபட்டுள்ள எண்ணிக்கை | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | HM -2-1 | 01 | 01 | - |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் | HM -1-3 | 01 | - | 01 |
| 03 | பணிப்பாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 | - | 01 |
| 04 | பணிப்பாளர் - நிதி | HM -1-1 | 01 | - | 01 |
| 05 | பணிப்பாளர் - சட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 | - | 01 |
| 07 | பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 | 01 | - |
| 08 | பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 | 01 | - |
| 09 | பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 | 01 | - |
| 10 | உதவி பணிப்பாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 11 | சட்ட அதிகாரி | MM -1-1 | 04 | 01 | 03 |
| 12 | உதவி பணிப்பாளர் - நிகழ்ச்சித்திட்டம் | MM - 1-1 | 01 | 01 | - |
| 13 | உதவி பணிப்பாளர் - உளவியல் | MM -1-1 | 01 | 01 | - |
| 14 | உதவி பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் | MM -1-1 | 01 | 01 | - |
| 15 | உதவி பணிப்பாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 | 01 | - |
| 16 | உதவி பணிப்பாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 | - | 01 |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 | 01 | - |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 02 | 01 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 27 | வீடியோ சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் அலுவலர் | JM – 1-1 | 01 | 01 | - |
| 28 | உளவியல் சமூக அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 29 | சைபர் குற்றச்செயல் பகுப்பாய்வாளர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 30 | சைபர் கண்காணிப்பு அலுவலர் | JM – 1-1 | 01 | - | 01 |
| 31 | சட்ட அமுலாக்க அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 32 | தகவல் தொழில்நுட்ப அதிகாரி | JM – 1-1 | 01 | - | 01 |
| 33 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 | - | 01 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 | - | 01 |
| 35 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 25 | 17 | 08 |
| 36 | மாவட்ட உளவியல் சமூக அலுவலர் | MA - 3 | 25 | 14 | 11 |
| 37 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 369 | 209 | 160 |
| 38 | பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு அலுவலர் | MA - 3 | 01 | - | 01 |
| 39 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 | 01 | - |
| 40 | கணக்குகள் உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 41 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 | - | 03 |
| 42 | நூலகர் | MA - 3 | 01 | - | 01 |
| 43 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 | - | 01 |
| 44 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 06 | 02 | 04 |
| 45 | ஆலோசனை உதவியாளர் | MA - 3 | 15 | 04 | 11 |
| 46 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 47 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 10 | 01 | 09 |
| 48 | இணையத்தள கண்காணிப்பு உதவியாளர் | MA - 3 | 02 | 01 | 01 |
| 49 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 | 01 | 02 |
| 50 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 10 | 02 | 08 |
| 51 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 | 06 | 09 |
| 52 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 | 01 | 01 |
| 53 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 | 12 | 20 |
| 54 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (சிங்களம்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 55 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) தட்டெழுத்து அலுவல்கள் (தமிழ்) | MA – 1-1 | 10 | 01 | 09 |
| 56 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (சிங்களம்) | MA – 1-1 | 10 | 02 | 08 |
| 57 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) செவ்வைபார்த்தல் (தமிழ்) | MA – 1-1 | 10 | - | 10 |
| 58 | சாரதி | PL 3 | 07 | 04 | 03 |
| 59 | செய்தி கொண்டு செல்பவர் (தூதுவர்) | PL-1 | 01 | - | 01 |
| 60 | அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 | 03 | - |
| 61 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 | 01 | 01 |
| ***மொத்தம்*** | | | **618** | **303** | **315** |

**மூலம் - நிர்வாகம் மற்றும் மனிதவளப் பிரிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை**

**நிதிசார் மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை பகுப்பாய்வு**

2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயலாற்றுகையானது மூன்று செயற்றிட்டங்களின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. 2024 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபா மில்லியன் 40 ஆகும்.







## அமுல்படுத்தப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2024

**சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பான கலந்தாராய்மை மற்றும் மாவட்ட, பிரதேச ரீதியில் சேவையாற்றும் அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்.**

சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக அரச அலுவலர்களை விழிப்புணர்வூட்டுவது இந்த ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது கொள்கைகளை அமுல்படுத்தும் தரப்பினர்கள் பத்து (1) ஆக உள்ளதுடன், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு, கல்வி, பாதுகாப்பு மற்றும் சட்டத்தை அமுல்படுத்தல், சுகாதாரம், சமூக மேம்பாடு, தொழில் மற்றும் தொழில்வாய்ப்பு, சுற்றுலா, வெகுசன ஊடகம் மற்றும் தகவல் தொழில்நுட்பம், சிறுவர் மற்றும் மகளிர் அலுவல்கள், அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான தொழில்வல்லுனர்களுக்கு மாவட்ட மட்டத்தில் செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

2024 ஆம் ஆண்டில் வளவாளர் குழாமிலுள்ள அலுவலர்களுக்காக 02 பயிற்சி செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 73 பேர் ஆவார்கள். 28 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 1372 பேர் ஆவார்கள்.

மேலும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களினால் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கை தொடர்பாக சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடுகள் இன்றி மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான 27 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. பயனாளிகளின் எண்ணிக்கை 689 பேர் ஆவார்கள்.

ஏற்பாடுகள் சகிதம் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **தொடர் இல.** | **மாவட்டம்** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | கொழும்பு | 01 | 40 |
| 02 | கம்பஹா | 01 | 45 |
| 03 | களுத்துறை | 01 | 48 |
| 04 | காலி | 01 | 45 |
| 05 | மாத்தறை | 01 | 51 |
| 06 | ஹம்பாந்தோட்டை | 01 | 40 |
| 07 | பதுளை | 01 | 49 |
| 08 | மொனராகலை | 01 | 52 |
| 09 | திருகோணமலை | 02 | 114 |
| 10 | மட்டக்களப்பு | 01 | 53 |
| 11 | அம்பாறை | 02 | 98 |
| 12 | புத்தளம் | 01 | 45 |
| 13 | குருநாகல் | 01 | 57 |
| 14 | கண்டி | 01 | 57 |
| 15 | மாத்தளை | 01 | 50 |
| 16 | நுவரெலியா | 01 | 47 |
| 17 | அநுராதபுரம் | 01 | 47 |
| 18 | பொலன்னறுவை | 01 | 44 |
| 19 | கேகாலை | 01 | 55 |
| 20 | இரத்தினபுரி | 01 | 45 |
| 21 | யாழ்ப்பாணம் | 02 | 110 |
| 22 | கிளிநொச்சி | 01 | 40 |
| 23 | முல்லைத்தீவு | 01 | 50 |
| 24 | மன்னார் | 01 | 45 |
| 25 | வவுனியா | 01 | 45 |
| **மொத்தம்** | | **28** | **1372** |

மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

**ஏற்பாடுகள் இன்றி மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறாகும்.**

| **தொடர் இல.** | **மாவட்டம்** | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 01 | கம்பஹா | 01 | 36 |
| 02 | குருநாகல் | 18 | 589 |
| 03 | மாத்தளை | 01 | 27 |
| 04 | அநுராதபுரம் | 04 | 534 |
| 05 | கேகாலை | 02 | 86 |
| **மொத்தம்** | | **26** | **1272** |

மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை




மூலம் - ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு




மூலம் - கணக்குகள் பிரிவு

## சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்பதற்கான தேசிய கொள்கையை விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்ட, நிருவாக அல்லது வேறு திருத்தங்களை இனங்காண்பதற்காக சட்டப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்ட குழுக்கள்

### 1. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தை திருத்தம் செய்யும் குழு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அமைத்துருவாக்கப்பட்ட 1998 இன் 50 ஆம் இலக்க சட்டம் அமுலுக்குவந்து 25 வருடங்கள் கடந்துள்ளன. மேற்படி 25 வருட காலப்பகுதிக்குள் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் சட்டரீதியாக இடம்பெற்றுள்ள மாற்றங்கள் காரணமாக அதற்கு இசைவாக சிறுவர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் மாற்றம் இடம்பெறல் வேண்டும் என்பது இனங்காணப்பட்டுள்ளது. தற்போது சட்டத்தை திருத்தம் செய்வது தொடர்பான பிரேரணைகள் சேகரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், மேற்படி வரைவுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2. சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு குற்றவாளியாக்கப்படுகின்ற ஆட்கள் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அறிமுகம் செய்யும் குழு

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளாரா என்பது பற்றிய பின்னாய்வு மேற்கொள்ளப்படுமாயின் அதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றவாளியான ஆட்கள் சிறுவர்களுடன் நடவடிக்கை மேற்கொள்வதைத் தடுத்துக் கொள்ள முடியும். இது தொடர்பில் சட்டரீதியான அல்லது நடவடிக்கைமுறைசார் வரையறைகளை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இதுவரை அறிமுகம் செய்யப்படவில்லை. எனவே இது தொடர்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஒரு குழு நியமனம் செய்யப்பட்டு அக்குழுவினால் சிபாரிசுகளும் சமர்ப்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் சிறுவர்களுடன் நேரடியாக நடவடிக்கை மேற்கொள்ளும் அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் 06 இனை உள்ளடக்கியதாக இந்த விசேட ஏற்பாடுகளை அமுல்படுத்த பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்காக சட்ட ரீதியில் ஆராய்வதற்காக உரிய விசேட ஏற்பாடுகள் தற்போது சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 3. சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளுக்கு எடுக்கும் காலத்தைக் குறைப்பதற்கான யோசனைகளை சமர்ப்பிக்கும் குழு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 232 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை துரிதப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடும் முறையியல் தயார் செய்யப்பட்டது. பிரதான தரப்பினர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி முன்னுரிமை வழங்க வேண்டிய விடயங்கள் இனங்காணப்பட்டன. அதற்கமைய தற்போது பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகப் பிரிவுகளிடமிருந்து தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

## 4. சஞ்சரித்தல் மற்றும் சுற்றுலாத் துறையில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய மன்றம்

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(ட) பிரிவை தத்துவமுள்ளதாக்குவதற்காக சிறுவர் பாதுகாப்புத் துறையில் நடவடிக்கை மேற்கொள்ளும் அரச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், சுற்றுலா மற்றும் சஞ்சரித்தல் துறைகளில் தனியார் நிறுவனங்களின் பங்கேட்புடன் தாபிக்கப்பட்டுள்ள இந்த மன்றத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கான வாய்ப்புக்களை குறைப்பதற்குத் தேவையான கலந்துரையாடலுக்கு சட்டப் பிரிவு முன்னின்று செயற்படுகின்றது.
அதற்கமைய இந்த மன்றம் சிறுவர் ஆட்கடத்தில் தொடர்பில் சமூக ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்கள் ஊடாக விழிப்புணர்வூட்டும் திட்டத்தை அமுல்படுத்தியது.






இதற்கு மேலதிகமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய வழிகாட்டல்களை தயார் செய்வதன் அவசியத்தன்மையை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

5. **பொலிஸாரின் பொறுப்பிலுள்ள சிறுவர்கள் தொடர்பாக அமுலில் உள்ள முறையியலில் காணப்படுகின்ற பலவீனங்கள் பற்றி ஆராய்ந்த மென்மேலும் விளைத்திறன்மிக்க பொறிமுறையை தயார் செய்வதற்கான யோசனைகளை சமர்ப்பிக்கும் குழு.**

இக்குழு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஆலொசனைக் குழுவினால் நியமனம் செய்யப்பட்டதாகும் என்பதுடன், அதிகாரசபையின் சட்டப் பிரிவின் பணிப்பாளர் இக்குழுவின் செயலாளராக செயற்பட்டார். இதன் இறுதி அறிக்கை குழுவினால் தயார் செய்யப்பட்டுள்ளது.

**சிறுவர் துஷ்பிரயோகத்துடன் சம்பந்தப்பட்ட சகல குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் ஒழுங்குறுத்தல்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின், 14(ஏ) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான சகல விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்துவது அதிகாரசபையின் பணியொன்றாகும். அதிகாரசபைக்கு அறிக்கையிடப்படுகின்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்குகள் தொடர்பான ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் முழு நாட்டிடையும் உள்ளடக்கியதாக சகல சிறுவர் துஷ்பிரயோக வழக்கு நடவடிக்கைகளையும் ஒழுங்குறுத்தவதற்கான வேலைத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு அதன் முதற்கட்டமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வளவில் அமைந்துள்ள விசேட பொலிஸ் விசாரணை பிரிவினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நாடு முழவதிலும் பேணிவரப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை ஒழுங்குறுத்துவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்ட மாஅதிபர் திணைக்களம், அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம், நீதிமன்ற மருத்துவ அலுவலர்கள் மற்றும் நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து வழக்குகளை ஒழுங்குறுத்துவது தொடர்பான வினவுதல் மற்றும் ஒருங்கிணைப்பும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**குற்றச்செயல்கள் பற்றிய விசாரணைகளுக்கு மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் அரவணைப்புக்குத் தேவையான சந்தர்ப்பங்கங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.**

சனாதிபதி செயலணியின் அறிவுரையின் பேரில், அதிகாரசபை சட்டத்தின் 14(ஊ) பிரிவின் கீழ் குற்றச்செயல்கள் பற்றிய விசாரணைகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக சிறுவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் தடுத்துவைக்கப்படுகின்ற மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற தடுப்பு இல்லங்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட பாடசாலைகளை ஒழுங்குறுத்துவது தொடர்பாக 07 மாகாணங்களை உள்ளடக்கியதாக முன்னோடிக் கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. இதன் போது குறித்த தரவுகளை ஒன்றுதிரட்டுவதற்காக ஒன்லையின் முறையியல் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. மேற்படி நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக குறித்த மாகாண நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்கள ஆணையாளர்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களிடமிருந்து தேவையான தகவல்கள் கோரப்பட்டு வழக்கு நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கட்டாயக் கல்விக் கட்டளையை அமுல்படுத்துவதை ஒழுங்குறுத்தல்**

2015 இன் 01 ஆம் இலக்க சிறுவர்களை கட்டாயமாக பாடசாலைக்கு அனுப்பும் கட்டயைாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள கட்டாயக் கல்விக் கட்டளை, 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(எ) பிரிவின் கீழ் கட்டாயக் கல்விக் கட்டளையை அமுல்படுத்துவதை ஒழுங்குறுத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மேல் மாகாண கல்விப் பணிப்பாளருடன் இது பற்றிய கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், மாகாண கட்டாயக் கல்விக் கட்டளையை அமுல்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ள

அலுவலர்களுக்கான அமர்வொன்றும் நடாத்தப்பட்டது. அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை மையமாகக் கொண்டு இக்கட்டாயக் கல்விக் கட்டளையை அமுல்படுத்துவது பற்றிய ஒழுங்குறுத்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**சட்டரீதியான சிக்கல்கள் தொடர்பில் உதவி வழங்குதல்.**

1) சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் எழுகின்ற சட்டரீதியான சிக்கல்களுக்கு சட்டத்தரணிகளின் அறிவுரைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. மேற்படி சட்டரீதியான சிக்கல்கள் ஒன்லையின், தொலைபேசி மற்றும் அதிகாரசபைக்கு தனிப்பட்ட வகையில் வருகைதரும் ஆட்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுவதுடன், 2024 ஆண்டு 803 சம்பவங்களுக்கு உதவி வழங்குவது மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சார்பாக நீதிமன்றங்களில், நியாய மன்றுகளில் மற்றும் ஆணைக்குழுக்களின் முன் விசாரிக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் ஆஜராவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

**சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய கொள்கையை தயார் செய்தல்.**

சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல்கள் தயார் செய்து முடிக்கப்பட்டன. அதற்கமைய இதனை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்காக சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்வதும் நிறைவு செய்யப்பட்டது. பாதுகாப்பான, அன்பான சூழலில் சிறுவர்களின் முழுமையான அபிவிருத்திக்கு உதவுகின்ற மற்றும் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற பெற்றோர் /குடும்பங்களுக்கு தமது சிறுவர்கள் பாதுகாப்பாக உள்ளார்கள் என்ற உணர்வைப் பெற்றுக்கொடுக்கின்ற, சமூக நியாயமான மற்றும் விலை தாங்கிக் கொள்ளக்கூடியதான உயர் தரத்தைக் கொண்ட அரவணைப்பைப பெற்றுக் கொடுப்பதற்காக சிறுவர் பகல்நேர பாதுகாப்பு அரவணைப்பு நிலையங்களின் வசதிகளை விஸ்தரிப்பதற்கு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் அவற்றை ஒழுங்குறுத்துவதை இலக்காகக் கொண்டு சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலையங்கள் பற்றிய தேசிய கொள்கை தயார் செய்யப்படுகின்றது. இதன் மூலம் அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள நோக்கங்கள் பின்வருமாறாகும்,

1. தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுகின்ற பெற்றோர் /குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் சிறுவர் பகல்நேர அரவணைப்பு நிலைய வசதிகளுக்கு நியாயமான பிரவேசத்தை விஸ்தரித்தல்.
2. சிறுவர்கள் தமது உச்சளவான ஆற்றல்களை அடைந்துகொள்வதை உறுதி செய்வதற்காக உயர் தரத்தைக் கொண்ட சிறுவர் பகல்நேர அரவணைப்பு சேவைகைள வழங்குவதற்கு வசதிகளை செய்துகொடுத்தல்.
3. வலது குறைந்த சிறுவர்களுக்கு உயர் தரத்தைக் கொண்ட சிறுவர் பகல்நேர அரவணைப்பு வசதிகளை விஸ்தரித்தல்.
4. சிறுவர் பகல்நேர அரவணைப்பு வசதிகள் முகாமைத்துவத்தின் விளைதிறனை மேம்படுத்தல்.
5. வினைத்திறன்மிக்க கட்டுப்பாடு மற்றும் வகைப்பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்காக அமுல்படுத்தும் பணிகளின் சட்டகத்தை அறிமுகம் செய்தல்.

கொள்கையை வரைவு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு 2024.08.05 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

**தேசிய தரவு முறைமையை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல்**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14(க) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவு முறைமையை தயார் செய்தல் மற்றும் பேணிவருவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணியாகும். இதற்கமைய இந்தத் தரவு முறைமையை தயார் செய்யத் தேவையான ஆரம்ப பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 03 கட்டங்களின் கீழ் மேற்கொள்வதற்கு ஆரம்பத் திட்டம் தயார் செய்யப்பட்டது. தேசிய தரவு முறைமைக்கு தகவல் தொழில்நுட்ப கல்விமான்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பல்தரப்பு அணுகுமுறையின் ஊடாக கிடைக்கின்ற

தரவுகளை உட்புகுத்துவதை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் தரவு முகாமைத்துவ முறைமை எவ்வாறு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும் என்பது பற்றி உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்படல் வேண்டும். தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளுக்காக தரவு முறைமை பேணிவரப்படுகின்றது. 2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகளை வழிப்படுத்துவதற்குள்ள தரவு முறைமையை இற்றைப்படுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது.

**1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை**

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது இதன் முக்கிய நோக்கமாகும். 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஒ) இற்கமைய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பொது மக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் குறித்த முறைப்பாடுகளை உரிய அலுவலர்களிடம் சமர்ப்பித்தல். இதன் மூலம் உடல்சார், உளவியல், பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் பாரபட்சம் காட்டல், சைபர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்வது 24 மணி நேரம் முழுவதிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தத் தொலைபேசிச் சேவை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் இயங்கிவருகின்றது. 2024 ஆம் ஆண்டு 1929 சிறுவர் உதவித் தொலைபேசி சேவைக்கு 7362 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. 1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்கு 29,667 அழைப்புக்கள் கிடைத்துள்ளன.

**சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்**

சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு பல்வேறு விதமாகக் கிடைக்கின்றன. மேற்படி முறைகள் பின்வருமாறாகும்.

01. 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையூடாக கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
02. அதிகாரசபைக்கு நேரடியாக வருகைதந்து சமர்ப்பிக்கப்படுகின்ற முறைப்பாடுகள்.
03. கடிதங்கள், பெக்ஸ் மின்னஞ்சல் மூலம் கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
04. சைபர் கண்காணிப்பு மூலம் கிடைக்கின்ற தகவல்கள்.
05. மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களுக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள்.
06. வெகுசன ஊடகம் அல்லது சமூக ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள்.

இவ்வாறு கிடைக்கின்ற முறைப்பாடுகள் அனைத்துக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளுக்கு மேலதிகமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் விடயப்பரப்புக்கு ஏற்புடையதல்லாத தவறுகளும் பொது மக்களினால் சமர்ப்பிக்கப்படுகின்றன.

40 (அ) தண்டனைச சட்டக்கோவையின் 286ஏ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ அல்லது 365ஆ பிரிவுகளிலுள்ள யாதாயினுமொரு கட்டளை;

40 (ஆ) பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை தொழிலில் ஈடுபடுத்தும் சட்டத்தின் யாதாயினுமொரு கட்டளை;

40 (இ) சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச் சட்டத்தின் யாதாயினுமொரு கட்டளை;

2024 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் பெறப்பட்ட மொத்த புகார்களின் எண்ணிக்கை 8,192 ஆகும்.




மூலம் - மத்திய ஆவணக்காப்பகம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

## தவறின் தன்மைக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் வகைப்படுத்தல்

| தொடர் இல. | தவறின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | சிறுவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் ஆபாச வெளியீடுகள் - 286 (அ) த.ச.கே. | 50 |
| 02 | தமது கட்டுப்பாட்டின் கீழ் ஒரு வளவில் மேற்கொள்ளப்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகத்தை அறிவிக்காமை - 286 (இ) த.ச.கோ. | - |
| 03 | சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்தல் - 288 த.ச.கோ. | 229 |
| 04 | பாலியல் புணர்ச்சிக்கு ஆட்கடத்தப்பட்ட ஒருவராக செயற்படுவதற்கு சிறுவர்களை வாடகைக்குப் பெறல் அல்லது சேவையில் ஈடுபடுத்தல் - 288(அ) த.ச.கோ. | 25 |
| 05 | மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை கடத்தலுக்கு பிள்ளைகளை வாடகைக்குப் பெறல் - 288(ஆ) த.ச.கே. | 10 |
| 06 | பிள்ளைகளுக்கு எதிரான குரூரத்தன்மை - 308 (அ) த.ச.கோ. | 1950 |
| 07 | காயம் ஏற்படுத்தல் - 310 த.ச.கோ. | 203 |
| 08 | கடும் காயம் ஏற்படுத்தல் - 311 த.ச.கோ. | 225 |
| 09 | பாலியல் துன்புறுத்தல் - 345 த.ச.கோ. | 580 |
| 10 | இலங்கைக்கு வெளியே கடத்திச் செல்லல் - 351 த.ச.கோ. | 01 |
| 11 | சட்டரீதியான பாதுகாவலரிடமிருந்து அகற்றல்- 352.த.ச.கே. | 166 |

| | | |
|---|---|---|
| 12 | கடத்திச் செல்லல் - 353 த.ச.கோ. | 46 |
| 13 | கடும் காயம் ஏற்படுத்துவற்காக கடத்தல் - 356 த.ச.கோ. | 02 |
| 14 | கடன் பிணை ஊழியம் அல்லது கட்டாய வேலை பெறல் - 358 (அ) த.ச.கோ. | - |
| 15 | கடத்தல்காரராக பிள்ளைகளை ஈடுபடுத்தல் - 360 (அ) த.ச.கோ. | 25 |
| 16 | சிறுவர்களிடமிருந்து முறையற்ற பாலியல் பயன்களை பெறுதல் - 360 (ஆ) த.ச.கோ. | 06 |
| 17 | சிறுவர்களை வியாபாரம் செய்தல்- 360 (இ)த.ச.கோ. | 24 |
| 18 | மகவேற்பு தொடர்பான தவறுகள் - 360(ஈ) த.ச.கோ. | 01 |
| 19 | பாலியல் துஷ்பிரயோகத்திற்காக ஒரு பிள்ளையை வற்புறுத்தல் த.ச.கோ. | 11 |
| 20 | வன்புணர்தல்- 363 த.ச.கே. | 42 |
| 21 | முறைதகாப் புணர்ச்சி - 364 (அ) த.ச.கே. | 10 |
| 22 | இயற்கைக்கு முரணான பாலியல் செயற்பாடுகள் - 365(அ) த.ச.கோ. | 06 |
| 23 | கடும் பாலியல் துஷ்பிரயோகம்- 365 (ஆ) த.ச.கே. | 321 |
| 24 | இயற்கைக்கு முரணான தவறுகள்- 365 (அ) த.ச.கே. | 01 |
| **வழங்கல்கள் மற்றும் நுகர்வுகள்** | | |
| காகிதாதிகளும் அலுவலக தேவைகளும் | 1,700,654.95 | 3,206,429.19 |
| மாவட்ட உத்தியோகத்தர்களுக்கான காகிதாதிகள் | 1,416,678.85 | 1,059,362.18 |
| செய்தித் தாள்கள் | 315,189.00 | 332,160.00 |
| எரிபொருள் | 833,958.00 | 1,242,700.00 |
| **மொத்தம்** | **4,266,480.80** | **5,840,651.37** |

| குறிப்பு 3.2 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---:|---:|
| **பராமரிப்புச் செலவுகள்** | | |
| மோட்டார் வாகனங்கள் | 2,435,271.39 | 2,438,423.72 |
| கணனி மற்றும் உபகரணங்கள் | 2,301,205.41 | 996,905.41 |
| கட்டிடம் மற்றும் அலுவலகம் | 664,963.15 | 535,957.00 |
| **மொத்தம்** | **5,401,439.95** | **3,971,286.13** |

| குறிப்பு 3.3 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---:|---:|
| **ஒப்பந்த சேவைகள்** | | |
| தொலைபேசி | 4,647,803.90 | 5,187,762.99 |
| முத்திரை மற்றும் தபால் | 733,135.00 | 725,200.00 |
| மின்சாரம் | 5,339,056.87 | 5,386,653.56 |
| நீர் | 279,966.93 | 380,852.66 |
| காப்புறுதி | 258,130.05 | 554,520.41 |
| பாதுகாப்பு சேவை | 2,612,902.61 | 3,996,776.58 |
| சுத்தப்படுத்தும் சேவை | 2,337,336.12 | 1,989,086.25 |
| விளம்பரங்கள் | 644,631.20 | - |
| அச்சிடுதல் | 31,430.00 | 11,315.00 |
| மொழிபெயர்ப்பு கட்டணங்கள் | 7,112.50 | - |
| விகிதங்கள் மற்றும் வரிகள் | 79,299.38 | 81,816.38 |
| கணக்காய்வு கட்டணங்கள் | 500,000.00 | 476,100.00 |
| பணிப்பாளர்சபை செலவீனங்கள் | 548,820.00 | 732,236.10 |
| நேர்காணல் குழு செலவீனங்கள் | 21,760.00 | 189,344.00 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | 70,801.00 | 131,595.00 |
| இணையத்தள பராமரிப்பு | 326,407.68 | 315,381.60 |
| சேவை உடன்படிக்கைகள் - கணனி மற்றும் ஏனையவை | 677,806.60 | 788,007.87 |
| உணவுக் கொடுப்பனவு | 318,400.00 | 299,200.00 |
| **மொத்தம்** | **19,434,799.84** | **21,245,848.40** |

| குறிப்பு 3.4 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **தேய்மானம் / கடன் தீர்ப்பு** | | |
| குத்தகைக் காணி | 779,041.10 | 779,041.10 |
| கட்டிடம் | 2,727,517.50 | 2,727,517.50 |
| மோட்டார் வாகனங்கள் | 4,089,500.00 | 4,844,500.00 |
| தளபாடம் | 799,623.99 | 1,007,277.02 |
| உபகரணங்கள் | 4,223,243.17 | 3,060,358.66 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - தளபாடம் | 750.00 | 750.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் - உபகரணங்கள் | | |
| - உபகரணங்கள் | 267,399.79 | 267,399.79 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | |
| - மோட்டார் வாகனங்கள் | 660,300.00 | 660,300.00 |
| - உபகரணங்கள் | 665,900.00 | 748,609.09 |
| சேவ் த சில்ரன்- உபகரணங்கள் | 20,097.00 | 20,097.00 |
| **மொத்தம்** | **14,233,372.55** | **14,115,850.16** |

| குறிப்பு 3.5 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **ஏனைய தொழிற்பாட்டு செலவுகள்** | | |
| இதர செலவீனங்கள் | 259,360.00 | 109,734.00 |
| தவிசாளர் உபசரிப்புச் செலவு | 567,284.25 | 421,336.75 |
| நிலையான சொத்துக்களை அகற்றுதல் A / C | 31,545.27 | - |
| **மொத்தம்** | **858,189.52** | **531,070.75** |

| குறிப்பு 3.6 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **NDAP- செலவுகளை செயற்படுத்தல்** | | |
| தேசிய கொள்கையை செயற்படுத்துதல் மற்றும் தரவுத்தளத்தை பராமரித்தல். | 3,372,804.65 | 3,882,612.07 |
| குழந்தையின் சிறந்த நலனைப் பாதுகாத்தல். | 13,302,672.33 | 12,165,058.08 |
| சிறுவர் பராமரிப்பு சேவையை கண்காணித்தல், சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்தல, தொடர்ந்த கண்காணித்தல். | 10,870,706.90 | 11,116,560.25 |
| முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | 2,788,764.28 | 3,845,328.36 |
| சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைத்தல். | 428,425.75 | 341,708.50 |
| சுனாமி பேரிடர் நிவாரணத் திட்டம். | 498,535.00 | 568,665.00 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், பட்டறைகள், கலந்தரையாடல்கள் மற்றும் பல | 1,508,209.10 | 1,384,507.95 |
| திறன் அபிவிருத்தி, பராமரிப்பு நடவடிக்கை | 114,889.00 | 828,492.00 |
| NCPA சிறுவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு | 278,271.88 | - |
| மொத்தம் | **33,163,278.89** | **34,132,932.21** |

| குறிப்பு 4 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **நிகழ்ச்சித் திட்ட செலவுகள்** | | |
| யுனிசெப் செயல் திட்டம் | 5,027,065.20 | 3,141,750.00 |
| சிதுவிலி சித்தம் செலவுகள் | - | 410,413.00 |
| சுனாமி அணுசனைச் செலவுகள் டெய்லி மிர்ர் | 113,000.00 | 405,000.00 |
| **மொத்தம்** | **5,140,065.20** | **3,957,163.00** |

| குறிப்பு 5 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய செலவுகள் | | |
| சுனாமி பயனாளிகள் | 33,000.00 | - |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதிய கொடுப்பனவுகள் | 60,000.00 | 839,884.94 |
| **மொத்தம்** | **93,000.00** | **839,884.94** |

| குறிப்பு 6 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| நிதி செலவு | | |
| வங்கிக் கட்டணங்கள் | 605.10 | 530.73 |
| **மொத்தம்** | **605.10** | **530.73** |

| குறிப்பு 7 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **காலப்பகுதிக்கான தேறிய மிகை) /பற்றாக்குறை(** | | |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை) /பற்றாக்குறை – (திறைசேரி | (8,326,544.34) | (10,938,775.15) |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை) /பற்றாக்குறை - (நிகழ்ச்சித் திட்டம் | - | - |
| காலப்பகுதிக்கான தேறிய மிகை) /பற்றாக்குறை - (தே.சி.பா.நிதி | 100,065.74 | (402,455.80) |
| **மொத்தம்** | **(8,226,478.60)** | **(11,341,230.95)** |

| குறிப்பு 8 | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்கள் | 2024.01.01 இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | கூட்டல் | அகற்றல் | மந்தைய ஆண்டு சீராக்கம் | 2024.12.31 இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
| செலவு/மதிப்பீடு | | | | | |
| தே.சி.பா.அ | | | | | |
| கட்டிடம் | 136,375,875.00 | 1,901,688.00 | - | - | 138,277,563.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | - | - | - | 48,445,000.00 |
| தளபாடம் | 19,372,781.37 | - | (35,271.00) | - | 19,337,510.37 |
| உபகரணங்கள் | 64,548,204.02 | 5,866,780.93 | (410,075.20) | - | 70,004,909.75 |
| | **268,741,860.39** | **7,768,468.93** | **(445,346.20)** | **-** | **276,064,983.12** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 501,446.00 | - | - | - | 501,446.00 |
| ILO சிறுவர் கடத்தல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் - தளபாடம் | 754,701.00 | - | - | - | 754,701.00 |
| ILO ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 6,969.00 | - | - | - | 6,969.00 |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | - | - | - | 2,232,158.65 |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 1,035,193.00 | - | - | - | 1,035,193.00 |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 96,275.00 | - | - | - | 96,275.00 |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் – கணனி | 736,632.89 | - | (439,555.00) | - | 297,077.89 |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - தளபாடம் | 79,147.50 | - | - | - | 79,147.50 |
| - உபகரணங்கள் | 85,757.00 | - | (3,490.00) | - | 82,267.00 |
| யு.என்.டி.பி தளபாடம் | | | | | |
| - தளபாடம் | 33,112.80 | - | - | - | 33,112.80 |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | - | - | - | 1,782,665.28 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | - | - | - | 8,378,609.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | - | - | - | 11,028,244.68 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் GIZ | 2,113,000.00 | - | - | - | 2,113,000.00 |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | - | - | - | 133,980.00 |
| | **28,997,891.80** | **-** | **(443,045.00)** | **-** | **28,554,846.80** |
| மொத்தம் | **297,739,752.19** | **7,768,468.93** | **(888,391.20)** | **-** | **304,619,829.92** |

| குறிப்பு 8 தொடர். | | | ரூபா. |
|---|---|---|---|
| தேறிய ஏட்டுப் பெறுமதி | கிரயம் | திரட்டப்பட்ட தேய்மானம் | தேறிய ஏட்டுப் பெறுமதி |
| **தே.சி.பா.அ** | | | |
| கட்டிடம் | 138,277,563.00 | 5,455,035.00 | 132,822,528.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | 25,439,166.00 | 23,005,834.00 |
| தளபாடம் | 19,337,510.37 | 16,503,453.24 | 2,834,057.13 |
| உபகரணங்கள் | 70,004,909.75 | 59,048,030.77 | 10,956,878.98 |
| | **276,064,983.12** | **106,445,685.01** | **169,619,298.11** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | 501,446.00 | - |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்- தளபாடம் | 754,701.00 | 754,701.00 | - |
| சட்ட விரோதம் தொடர்பான ILO நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 6,969.00 | 6,969.00 | - |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | 2,232,158.65 | - |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 1,035,193.00 | 1,035,193.00 | - |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 96,275.00 | 96,275.00 | - |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் - கணனி | 297,077.89 | 297,077.89 | - |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 79,147.50 | 79,147.50 | - |
| - உபகரணங்கள் | 82,267.00 | 81,767.00 | 500.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 33,112.80 | 33,112.80 | - |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | 802,199.37 | 980,465.91 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | 4,348,209.00 | 4,030,400.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | 9,946,385.22 | 1,081,859.46 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் GIZ | 2,113,000.00 | 2,113,000.00 | - |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | 92,028.89 | 41,951.11 |
| | **28,554,846.80** | **22,419,670.32** | **6,135,176.48** |
| மொத்தம் | **304,619,829.92** | **128,865,355.33** | **175,754,474.59** |

| குறிப்பு 8 தொடர். | | | ரூபா. |
|---|---|---|---|
| தேறிய ஏட்டுப் பெறுமதி | கிரயம் | திரட்டப்பட்ட தேய்மானம் | தேறிய ஏட்டுப் பெறுமதி |
| **தே.சி.பா.அ** | | | |
| கட்டிடம் | 138,277,563.00 | 5,455,035.00 | 132,822,528.00 |
| மோட்டார் வாகனங்கள் | 48,445,000.00 | 25,439,166.00 | 23,005,834.00 |
| தளபாடம் | 19,337,510.37 | 16,503,453.24 | 2,834,057.13 |
| உபகரணங்கள் | 70,004,909.75 | 59,048,030.77 | 10,956,878.98 |
| | **276,064,983.12** | **106,445,685.01** | **169,619,298.11** |
| **நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து பெற்ற நிலையான சொத்துக்கள்** | | | |
| புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 501,446.00 | 501,446.00 | - |
| ILO இனது ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம்- தளபாடம் | 754,701.00 | 754,701.00 | - |
| சட்ட விரோதம் தொடர்பான ILO நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 6,969.00 | 6,969.00 | - |
| சுனாமி நன்கொடையாளர் நிகழ்ச்சித் திட்டம் – தளபாடம் | 2,232,158.65 | 2,232,158.65 | - |
| சுனாமி பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 1,035,193.00 | 1,035,193.00 | - |
| நடத்தை விதிகள் நிகழ்ச்சித் திட்டம் - தளபாடம் | 96,275.00 | 96,275.00 | - |
| பீ.சீ.என் நிகழ்ச்சித் திட்டம் - கணனி | 297,077.89 | 297,077.89 | - |
| செய்யிவெக் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 79,147.50 | 79,147.50 | - |
| - உபகரணங்கள் | 82,267.00 | 81,767.00 | 500.00 |
| யு.என்.டி.பி நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - தளபாடம் | 33,112.80 | 33,112.80 | - |
| - உபகரணங்கள் | 1,782,665.28 | 802,199.37 | 980,465.91 |
| யுனிசெப் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| - மோட்டார் வாகனங்கள் | 8,378,609.00 | 4,348,209.00 | 4,030,400.00 |
| - உபகரணங்கள் | 11,028,244.68 | 9,946,385.22 | 1,081,859.46 |
| ஜீ.ஐ.இஸட் - மோட்டார் வாகனம் GIZ | 2,113,000.00 | 2,113,000.00 | - |
| சேவ் த சில்ரன் - உபகரணங்கள் | 133,980.00 | 92,028.89 | 41,951.11 |
| | **28,554,846.80** | **22,419,670.32** | **6,135,176.48** |
| மொத்தம் | **304,619,829.92** | **128,865,355.33** | **175,754,474.59** |

| குறிப்பு 8.1 | | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| குத்தகை காணி | குத்தகை காலம்(வருடங்கள்) | குத்தகைக் கிரயம் | கடந்த வருடம் வரைக்குமான திரட்டப்பட்ட கடன் தீர்ப்பு | ஆரம்ப நிலுவை | 2024 ஆம் ஆண்டுக்கான கடன் தீர்ப்பு | முன் கொண்டு செல்லப்படும் நிலுவை |
| குத்தகை காணி (2000) | 50 | 8,422,459.89 | 4,042,780.76 | 4,379,679.13 | 168,449.20 | **4,211,229.93** |
| குத்தகை காணி (2016) | 30 | 18,317,757.08 | 4,884,735.20 | 13,433,021.88 | 610,591.90 | **12,822,429.98** |
| | | **26,740,216.97** | **8,927,515.96** | **17,812,701.01** | **779,041.10** | **17,033,659.91** |

| குறிப்பு 9 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **நீண்ட காலமாக பெறத்தக்கவையாக உள்ளவை** | | |
| இடர்கடன் | 2,782,677.59 | 2,425,739.83 |
| **மொத்தம்** | **2,782,677.59** | **2,425,739.83** |

| குறிப்பு 10 | ரூபா.. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **முதலீடுகளும் சேமிப்புகளும்** | | |
| **பணிக்கொடை நிதி முதலீட்டுக் கணக்கு -261605** | 1,544,734.42 | 476,574.23 |
| சுனாமி சேமிப்புக் கணக்கு - 679016 | 32,243.41 | 64,004.18 |
| இடர்கடன் சேமிப்பக் கணக்கு - 89945554 | 284,641.94 | 541,534.89 |
| **நிலையான வைப்பு** | 8,787,945.44 | 8,265,387.95 |
| **மொத்தம்** | **10,649,565.21** | **9,347,501.25** |

| குறிப்பு 11 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **பெறத்தக்க கணக்குகள்** | | |
| பண்டிகை முற்பணம் | 168,950.00 | 135,250.00 |
| காசு முற்பணம் | 505,490.94 | 1,558,700.05 |
| பெறத்தக்க கணக்குகள் | 23,976.26 | 162,681.00 |
| பெறத்தக்க இடர் கடன்கள் | 1,025,581.72 | 714,569.53 |
| சேவ் த சில்ரன் இடமிருந்து மீளப் பெறக் கூடியது | - | 410,413.00 |
| **மொத்தம்** | **1,723,998.92** | **2,981,613.58** |

| குறிப்பு 12 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **முன்கூட்டியே செலுத்தும் கட்டணங்கள்** | | |
| காப்புறுதி | 152,692.74 | 137,110.20 |
| சேவை உடன்படிக்கை | 343,611.97 | 255,682.65 |
| **மொத்தம்** | **496,304.71** | **392,792.85** |

| குறிப்பு 13 | 2024 | **2023** |
|---|---|---|
| | ரூபா. | ரூபா.. |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவை** | | |
| இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு 228076 | 7,577,346.86 | 3,019,423.97 |
| - நடைமுறைக் கணக்கு 71252941- | 690,116.96 | 504,848.14 |
| மக்கள் வங்கி - நடைமுறைக் கணக்கு 174-1-001-4-0347385 | 71,524.74 | 160,524.74 |
| **மொத்தம்** | **8,338,988.56** | **3,684,796.85** |

குறிப்பு **-14 A**

**நிகழ்ச்சித்திட்ட நிதி இருப்பு விபரம்**

ரூ.

| நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | 2024 | | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | | நிதி கிடைப்பனவு | செலவுகள் | |
| சுனாமி அனுசரணை - டெய்லி மிரர் | 160,524.74 | - | 24,000.00 | (113,000.00) | 71,524.74 |
| சயில்ட் பண்ட் | 504,300.53 | - | - | - | 504,300.53 |
| மக்கள் வங்கி | - | - | 500,000.00 | - | 500,000.00 |
| யுனிசெப் நிதி | 212,250.00 | - | 4,814,815.20 | (5,027,065.20) | - |
| **மொத்தம்** | **877,075.27** | **-** | **5,338,815.20** | **(5,140,065.20)** | **1,075,825.27** |

குறிப்பு **-14 B**

**சி.பா.அ. ச. நிதி - கணக்கு**

**சாராம்சம்**

ரூபா.

| நிதியின் பெயர் | ஆரம்ப நிலுவை | முந்தைய ஆண்டு சீராக்கல் | கிடைப்பனவுகள் (குறிப்பு 1சீ) | செலவுகள் (குறிப்பு 12) | 2024 ஆம் ஆண்டுக்காக தேறிய மிகை / பற்றாக்குறை | இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| National Child Protection Fund | 1,693,044.44 | - | 193,065.74 | (93,000.00) | 100,065.74 | 1,793,110.18 |

| குறிப்பு 15 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| **திரட்டப்பட்ட செலவுகள்** | | |
| மேலதிக நேரக் கொடுப்பனவு | 192,479.89 | 178,989.40 |
| பாதுகாப்பு சேவை | 217,841.52 | 434,523.73 |
| சுத்தப்படுத்தும் சேவை | 215,641.16 | 174,526.60 |
| இ.பி.எஃப். செலுத்த வேண்டியவை | 478,293.00 | 478,293.00 |
| இ.டி.எஃப். செலுத்த வேண்டியவை | 71,743.95 | 71,743.95 |
| போக்குவரத்து மற்றும் வாழ்வாதார கொடுப்பனவு | 608,725.00 | 661,650.91 |
| மின்சாரம் | 384,923.69 | 502,960.69 |
| நீர் | 5,099.12 | 7,263.02 |
| காகிதாதிகள் | 100,000.00 | - |
| சி.பா.நிதியத்தின் பிரதான கணக்கு | - | 410,413.00 |
| தொலைபேசி கட்டணங்கள் | 496,500.34 | 429,741.98 |
| வேறு கடன் வழங்குனர் | 1,091,736.10 | 2,600,427.14 |
| இணையத்தள பராமரிப்பு | 27,200.64 | 27,024.96 |
| செய்தித் தாள் கொள்வனவு | 21,250.00 | 28,790.00 |
| விடுமுறைக் கொடுப்பனவு | - | 2,564.25 |
| தொழில் பயிலுநர் பயிற்சிக் கொடுப்பனவு | 95,000.00 | 73,750.00 |
| செலுத்தவேண்டிய சம்பளம் | 835,470.95 | 1,469,990.32 |
| செலுத்த வேண்டிய ஊதியம் | 641,358.62 | 1,176,458.62 |
| **மொத்தம்** | **5,483,263.98** | **8,729,111.57** |

| குறிப்பு 16 | ரூபா. 2024 | ரூபா. 2023 |
|---|---|---|
| குறுங்கால ஒதுக்கீடு | | |
| கணக்காய்வு கட்டண ஒதுக்கீடு | 500,000.00 | 476,100.00 |
| குறுங்கால பணிக்கொடை நிதிய ஒதுக்கீடு | 2,207,222.50 | 474,793.50 |
| **மொத்தம்** | **2,707,222.50** | **950,893.50** |

| | | | | | ரூபா. |
|---|---|---|---|---|---|
| குறிப்பு 17 | **20241/1/** இல் உள்ளவாறான ஆரம்ப நிலுவை | **2024** ஆம் ஆண்டுக்கான வருமானங்கள் | **2024** ஆம் ஆண்டுக்கான செலவுகள் | முந்தைய ஆண்டு சீராக்கம் | **2024/12/31** இல் உள்ளவாறான இறுதி நிலுவை |
| செயற்பாட்டு மூலதனம் | | | | | |
| மூலதன மானியம் | | | | | |
| அரச மானியங்கள் - | 13,065,607.71 | 166,920.00 | (3,155,555.65) | - | 10,076,972.06 |
| யுனிசெப் - மானியம் | 1,861,159.46 | - | (722,600.00) | - | 1,138,559.46 |
| மூலதன மானியம் - யு.என்.டி.பி | 1,247,865.70 | - | (267,399.79) | - | 980,465.91 |
| வாங்கிய சொத்து கையகப்படுத்தல்/ அபிவிருத்தி நடவடிக்கை | 3,300.50 | - | (3,300.50) | - | - |
| மூலதன மானியம் - குத்தகை காணி | 13,433,021.87 | - | (610,591.90) | - | 12,822,429.97 |
| மூலதன மானியம் - சேவ் த சில்ரன் | 62,048.11 | - | (20,097.00) | - | 41,951.11 |
| அமைச்சினது மானியம் ( மூலதன கையகப்படுத்தல்( | 2,187,770.83 | 5,699,860.93 | (2,201,816.56) | - | 5,685,815.20 |
| ஜனாதிபதி அலுவலகத்தினால் வழங்கப்பட்டமோட்டார் வாகனம் | 4,524,167.00 | - | (610,000.00) | - | 3,914,167.00 |
| மூலதன மானியம்(கேபிடல் கிரேண்ட்)- ICTA | 2,131,307.14 | - | (339,212.40) | - | 1,792,094.73 |
| **மொத்தம்** | **38,516,248.32** | **5,866,780.93** | **(7,930,573.80)** | - | **36,452,455.44** |

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. VOT/B/NCPA/01/2024/03 திகதி : 2025 மே மாதம் 30 ஆம் திகதி

தவிசாளர்,

தேசிய சிறுவர் பாதுபாப்பு அதிகாரசபை.

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்திற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படையாக விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து அதிகாரசபையின் 2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இன் 49 ஆம் பந்திக்கமைய, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது அச்சொத்துக்கள் ஏற்புடையதாகின்ற சொத்து வகுப்பு முழவதையும் மீள்மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும் அதிகாரசபை 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்றுக்களுக்கு அமைய பெறுமதி ரூபா 58,936,609 ஆன மோட்டார் வாகன சொத்துக்கள் வகுப்பில் உள்ளடக்கப்பட்ட 47 மோட்டார் வாகனங்களில் 09 மோட்டார் வாகனங்கள் 2021 ஆம் ஆண்டு மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் மற்றும் எஞ்சிய 38 வாகனங்கள் செலவினத்தின் பேரில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் தளபாடம் மற்றும் உபகரணங்கள் சொத்து வகுப்புக்கள் இரண்டிலும் மொத்தமாக தேய்வு செய்து முடிக்கப்பட்ட சொத்துக்கள் விடயங்கள் மாத்திரம் 2019 ஆம் ஆண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்திக்கமைய, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் எஞ்சியுள்ள பெறுமதி மற்றும் அவற்றின் பயன்வாய்ந்த ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டுக்குரிய நிதிக் கூற்றுக்களுக்கு அமைய தேறிய பெறுமதி தேய்வுச் செலவினம் / மீள்மதிப்பீட்டு பெறுமதி ரூபா 77,290,013 ஆன ஆதனம், பொறி, உபகரண் விடயங்கள் 2456 இன் பயன்மிக்க ஆயுட் காலம் சரியாக மீளாய்வு செய்யப்படாமை காரணமாக தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கமைய ஏற்பட்டுள்ள மதிப்பீட்டுத் தவறினை இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இற்கமைய திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 19 ஆம் பந்திக்கு முரணாக கொடுப்பனவு உறுதியற்றதாக காணப்பட்ட நிலுவை சம்பளம் செலுத்துவதற்கு ரூபா 641,358 செலுத்த வேண்டிய சம்பளமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பந்தி 100 இற்கமைய அறிக்கையிடும் திகதியிலுள்ள சகல எதிர்பாரா பொறுப்புக்கள் வகுப்புக்கு எதிர்பாரா பொறுப்புக்களின் தன்மை பற்றிய பொழிப்பு விபரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுதப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வழக்கு நடவடிக்கைகள் மூன்று தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நியமத்தின் 22 ஆம் பிரிவுக்கு அமைய மேற்படி நடவடிக்கைகள் தொடர்பாக சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டி ஏற்படுகின்ற சட்டக் கட்டணங்களுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்திக்கு அமைய செலவினம் மற்றும் தேறிய நின்ற பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதிக்கு இருப்பு

அளவிடப்பட வேண்டுமாயினும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 05 இன் கீழ் இருப்பு சாதாரண செலவின முறையில் பெறுமதியிடப்பட்டுக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஊ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 11 இன் 12 மற்றும் 93 ஆம் பந்திக்கு அமைய பரிமாற்றம் இடம்பெறாத கொடுக்கல் வாங்கலாக வகைப்படுத்தலாக நிறுவனத்திற்கு கிடைத்த பரிசுகள் மற்றும் கொடைகள் அனைத்தும் வருமானமாக இனங்காணப்பட வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டில் மூலதன் கொடையாக மற்றும் கருத்திட்டக் கொடையாக கிடைத்திருந்த கூட்டுதொகை ரூபா 11,398,662 வருமானமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் அரச மூலதன் கொடை தேய்வு செய்யப்பட்டு வந்ததுடன், 2024 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அரச மூலதனக் கொடை மீதியாக ரூபா 36,452,455 நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 14 இன் 21, 22 மற்றும் 23 ஆம் பந்திகளுக்கு அமைய ரூபா 2,364,438 ஆன பணிப்பாளர் சபை ஊதியம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 19 இன் 76 மற்றும் 77 ஆம் பந்திக்கு அமைய ஊழியர் பயன்களை இனங்காண்பது மற்றும் அளவிடுவதன் கீழ் நியமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு பிந்திய ஊழியர் பயன்கள் மற்றும் கடப்பாடுகள் தற்கால பெறுமதிக்கு அளவிடப்பட வேண்டுமாயினும் அதிகாரசபை மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா 91,098,000 ஆன பணிக்கொடை ஒதுக்கத்துக்கு அதற்கமைய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமம் 20 இன் 17, 26 மற்றும் 118 ஆம் பந்திக்கு அமைய கணினி முறைமை மற்றும் கணினி மென்பொருள் அருவைச் சொத்துக்களாக இனங்காணப்பட்டு பயன்வாய்ந்த ஆயுட் காலம் முழுவதும் தேய்வு செய்யப்பட வேண்டுமாயினும், அதிகாரசபை 2024 சனவரி மாதம் கொள்வனவு செய்த ரூபா 5,033,718 ஆன தரவு முறைமைகள் 02 இன் பெறுமதி உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டு கணக்கீடு மற்றும் சம்பளங்கள் தொடர்பாக ரூபா 473,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கணக்கீட்டு முறைமை, அருவைச் சொத்துக்களின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக குறித்த ஆண்டின் செலவினமாக பதிவழிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய அருவைச் சொத்துக்கள் ரூபா 5,718 மற்றும் தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் ரூபா 473,000 இனால் குறைவாகவும், உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,506,718 இனால் மிகையாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஒ) 2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதி வரை சுமார் 5000 புத்தகங்கள் காணப்படுகின்ற நூலகம் அதிகாரசபையினால் பேணிவரப்பட்டுள்ளதுடன், மீளாய்வு ஆண்டின் இறுதி வரையும் மேற்படி நூலகத்துக்கு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் நடைமுறை அல்லாத சொத்துக்களாக இனங்காணப்படாது குறித்த ஆண்டின்

செலவினமாக பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ரூபா 250,290 பெறுமதிமிக்க புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

(ஓ) மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய அரச கொடை மூலம் கிடைத்த சொத்துக்களுக்குரிய மீதி இருக்கவில்லை எனினும் 06 சொத்து விடயங்கள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 302,797 தவறாக மீளாய்வு ஆண்டின் தேய்வாக சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு மிகைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சொத்து மீள்மதிப்பீட்டு மிகை மற்றும் ஆண்டின் குறை அத்தொகையினால் குறைவாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(ஔ) 2023 ஆம் ஆண்டு அதிகாரசபைக்கு எதிராக வெளி நிறுவனமொன்றினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நடவடிக்கைகள் 02 தொடர்பாக சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த சட்டவரைஞர் கட்டணங்களுக்கான ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் மீளாய்வு ஆண்டில் அதற்கான கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்த ரூபா 228,500 ஆன சட்டவரைஞர் கட்டணம் கடந்த ஆண்டின் இலாபத்தில் சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வு ஆண்டின் பயிற்சி மற்றும் வேறு செலவினமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் ஆண்டின் குறை மற்றும் தடுத்துவைக்கப்பட்ட உழைப்பு அப்பெறுமதியினால் மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(க) மீளாய்வு ஆண்டுக்குரிய பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 4,012,402 மிகையாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக ஆண்டின் குறை மற்றும் பணிக்கொடை ஒதுக்க மீதி அத்தொகையினால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துக்கு அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக் கொண்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும், உகந்ததும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 அதிகாரசபையின் 2024 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட அதிகாரசபையின் 2024 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடங்கியுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்காக தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படுகின்றது. இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்பத்துவதில்லை என்பதுடன் நான் அது பற்றி எவ்வகையிலும் சான்றுப்படுத்துவதோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பில், எனது பொறுப்பாக இருப்பது ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதமாகக் பெற்றுக் கொண்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பொருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் நான் மேற்கொண்டுள்ள பணிகளின் அடிப்படையில், குறித்த ஏனைய தகவல்கள் அதன் போதியளவில் தவறான வெளிப்படுத்தல் இருப்பதாக நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில், மேற்படி விடயத்தை நான் அறிக்கையிடுவது அவசியமாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.5 நிதிக் கூற்றுக்களை கணக்காய்வு செய்வது தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

பொதுவாக நிதிக் கூற்றுக்களாவன, மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்

தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள் விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை அதிகாரசபை பேணிவந்திருந்தது என்பது,

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபை சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன என்பது,

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கடந்த ஆண்டில் நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் இந்த நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது,

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் அதிகாரசபையுடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது அதிகாரசபையின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு | அவதானிப்பு |
|---|---|---|
| அ | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட 1992 நிதிப் பிரமாணம் 371(5) | i. அதிகாரசபையினால் மீளாய்வு ஆண்டில் 67 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 505,491 ஆன முற்பணம் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>ii. அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட பணி குறித்த கட்டுநிதி குறித்த பணிக்குப் பயன்படுத்தப்படாது 02 முதல் 69 நாட்கள் வரையான காலப்பகுதிக்குள் கையில் வைத்திருந்து மொத்தத் தொகையும் மீளத் தீர்க்கப்பட்டிருந்த 09 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| ஆ | அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 08/2019(I) மற்றும் 08/2019(II) | இலங்கையில் e-GP பெறுகை செயன்முறையை அறிமுகம் செய்வது தொடர்பாக 2020 சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு அரச நிறுவனத்திலும் e-GP பெறுகை செயன்முறையின் கீழ் பதிவு செய்து மேற்படி முறைமையின் ஊடாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செயற்பட வேண்டுமாயினும், கணக்காய்வு செய்யப்பட்ட 2025 மே 16 ஆம் திகதி வரையும் அதிகாரசபை அதற்கமைய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து அதிகாரசபையின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

**தத்துவம், பணிகள் மற்றும் அவதானிப்பு செயற்பாடுகள்**

(அ) **1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டம்**

| | | |
|---|---|---|
| I. | சட்டத்தின் 14 (அ) மற்றும் (ஊ) பிரிவு | சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல் மற்றும் அவ்வாறான துர்நடத்தைகளுக்கு ஆளான சிறுவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது பற்றிய தேசிய கொள்கையை தயார் செய்து அதனை விளைத்திறன்மிக்கவாறு அமுல்படுத்துவது அதிகாரசபையின் முக்கிய நோக்கமாகும். எனினும் மேற்படி தேசிய கொள்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கு அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் 21 வருடங்கள் கடந்துள்ள போதும் மேற்படி அங்கீகரிக்கப்பட்ட திகதியான 2019 அக்டோபர் 29 ஆம் திகதி முதல் கணக்காய்வுத் திகதியான 2025 மே 16 ஆம் திகதிக்கு 5 வருடங்கள் கடந்துள்ள போதிலும் தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கான ஐந்து வருட திட்டத்தை தயார் செய்து அங்கீகரித்துக் கொள்ள முடியவில்லை. அதன் காரணமாக சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையை அமுல்படுத்த முடியாது போயுள்ளது. |
| II | 14(க) பிரிவு | அதிகாரசபை தாபிக்கப்பட்டு 26 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும் அதிகாரசபையின் அடிப்படை நோக்கமொன்றாகக் காணப்படுகின்ற தேசிய தரவு முறைமையை தாபித்து அதனைப் பேணிவர முடியாது போயுள்ளது. இதன் காரணமாக 14(எ), (ஏ) மற்றும் (ஐ) பிரிவுகளுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சட்டத்தை அமுலுப்படுத்துவதன் முன்னேற்றத்தை ஒழுங்குறுத்தல் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பாக மக்கள் |

| | | |
|---|---|---|
| | | எதிர்பார்க்கின்ற தகவல்களைப் பெற்றுக் கொடுக்க முடியாது போயுள்ளது. |
| III | சட்டத்தின் 14 (உ)(எ)(ஏ)(ஒ)(ஔ) பிரிவு | 2014 ஆம் ஆண்டு முதல் 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை அதிகாரசபைக்கு சிறுவர் துர்நடத்தைகள் தொடர்பிலான முறைப்பாடுகள் 107,663 கிடைத்துள்ளதுடன், இவற்றில் முறைப்பாடுகள் 46,813 அதாவது 43 சதவீதமானவை தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதற்கமைய சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அரவணைப்பைச் செய்துகொடுத்து சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாவிலும் உரிய சட்டங்களை அமுல்படுத்தல், ஒழுங்குறுத்தல், சகல விசாரணை நடவடிக்கைகளினதும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல், துர்நடத்தைகள் பற்றிய முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளல், சட்ட அதிகாரிகளிடம் ஆற்றுப்படுத்தல் போன்ற நோக்கங்களை போதியளவில் நிறைவேற்ற முடியாது போயுள்ளது. |
| IV | 14(ஈ), 14(ஐ) | துர்நடத்தைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுதல், சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் பற்றி மற்றும் சிறுவர் துர்நடத்தைகளை தடுத்துக் கொள்ளும் முறை பற்றி விழிப்புணர்வூட்டல் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பு, சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றி மக்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் கல்வியறிவூட்டுவது அதிகாரசபையின் நோக்கமாகும். அதற்கமைய அதிகாரசபையினால் பாடசாலைகளை பதிவு செய்துகொள்ளல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதும் 2025 ஏப்ரல் 15 ஆம் திகதி வரை 1396 பாடசாலைகள் மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் மாவட்ட மாணவர் தூதுவர் |

நிகழ்ச்சித்திட்டங்கள் 46 மற்றும் மாவட்ட தூதுவர் மாநாடுகள் 24 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய அதிகாரசபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) 2021 யூலை 12 ஆம் திகதிய அவி/21/1131/308/097 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்கள் வழங்கும் சாட்சியங்களை வீடியோ ஒளிப்பதிவு செய்வதற்கான 09 அலகுகளை மாகாண மட்டத்தில் தாபிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டு 2025 மே மாதம் 16 ஆம் திகதிக்கு சுமார் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும் 07 அலகுகளை இயங்கச் செய்வதற்கு முகாமைத்துவம் தவறியுள்ளது. கொழும்பு தலைமை அலுவலகம் மற்றும் ராகம வைத்தியசாலையில் 02 அலகுகள் மாத்திரம் இயங்கிவந்ததுடன், மேற்படி இரண்டு அலகுகளிலும் 2024 சனவரி 01 முதல் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வீடியோ ஒளிப்பதிவு செய்வது 205 மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பிலான வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை காட்சிப்படுத்துவதற்கான திட்டமொன்று தயார் செய்யப்பட்டு 03 மாதங்களுக்குள் அமுல்படுத்த வேண்டுமென்று தகவல் அறியும் ஆணைக்குழுவின் 2024 ஏப்ரல் 17 ஆம் திகதி கட்டளையிடப்பட்டுள்ள போதும் 2025 மே 16 ஆம் திகதி வரையும் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய தகவல்களை காட்சிப்படுத்த அதிகாரசபை தவறியுள்ளது.

(இ) தாபன விதிக்கோவையின் முதலாவது அட்டவணையின் கீழான முறைகேடுகள் தொடர்பில் 2010 மே 21 ஆம் திகதிய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழவில் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒரு வழக்குக்கு அமைய 2010 ஆகஸ்ட் 25 ஆம் திகதி சேவை இடைநிறுத்தப்பட்ட கணக்காளர் தொடர்பில் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XLVIII இன் 27.11 ஆம் பிரிவுக்கு அமைய முறையான ஒழுக்காற்று விசாரணையை நடாத்தி ஒழுக்காற்று உத்தரவை வெளியிட 11 வருடங்கள் கடந்துள்ளன. மேலும் இந்த வழக்குத் தீர்ப்புக்கு அமைய குறித்த அலுவலர் குற்றமற்றவர் என விடுதலையளிக்கப்படாத நிலையில் நிதி அமைச்சின் பிரதிநிதி

கலந்துகொள்ளாத 2022 மே 26 ஆம் திகதிய 214 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது மேற்படி அலுவலருக்கு ரூபா 8,374,383 ஆன நிலுவைச் சம்பளத்தை செலுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், 2023 மே 31 ஆம் திகதியளவில் இதில் ரூபா 7,270,402 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளது.

(ஈ) அதிகாரசபையின் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளும் போது அதிகாரசபைக்கு நடவடிக்கைமுறைக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பட்டத்துடன் பட்டப் பின் படிப்பு மற்றும் ஆகக் குறைந்தது 12 வருட கால அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டுமாயினும், மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத மற்றும் முறைகேடு பற்றிய குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் ஒருவர் 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதிய பணிப்பாளர் சபை தீர்மானம் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(உ) அப்போது காணப்பட்டசிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்ட அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2024 ஆம் ஆண்டு ரூபா 23,420,000 செலவிடப்பட்டு தேசிய சிறுவ் பாதுகாப்பு அதிகாரசபைக்கு வாய்மூலமாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்த கட்டிடத்தை 10 வருடங்களுக்கும் மேலாக சட்டபூர்வமாக சாட்டுதல் செய்துகொள்ள மற்றும் விளைதிறன்மிக்கவாறு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் பயனற்றதாக காணப்பட்டது.

(ஊ) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டில் 30 வருட குத்தகை அடிப்படையில் ஒரே தடவையில் ரூ. 18,317,757 ஆன தொகை செலுத்தப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் மாதிவெல பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு காணி பெற்றுக் கொள்ளப்பட்டு 08 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள போதும் அறிக்கையின் திகதி வரையும் எந்தவொரு பணிக்கும் பயன்படுத்தப்படாது பயனற்றதாக காணப்பட்டது.

(எ) ஆகக் குறைந்த தகைமைகள் இல்லாத ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு முரணாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த அலுவலர்கள் 05 பேர் தொடர்பாக 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மூலமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வுத் திகதியான 2025 மே 16 ஆம் திகதி வரையும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**கையொப்பம் / ஜி.எச்.டி. தர்மபால**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)